
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram - மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria - ரியா பணப்பரிமாற்றம்
Western Union - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.11.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 323 பக்கங்கள் : 12



# 5 முக்கிய அமைச்சுக்கள் ஜனாதிபதி அநுர வசம்!

## 21 பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்பு

கொழும்பு, நவம்பர் 19

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது**

புதிய அமைச்சரவை 21 பேருக்கு மட்டுப்படுத்தப்படுவதோடு பாதுகாப்பு, நிதி ,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிற்றல் பொருளாதார ஆகிய அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கத்தின் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் வருமாறு-

01) ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க - பாதுகாப்பு, நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்.

02) கலாநிதி ஹரிணி அமரசூரிய - பிரதமர், கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர்.

03) விஜித ஹேரத் - வெளிநாட்ட லுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்.

04) பேராசிரியர் சந்தன அபேரத்ன - பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

05) சட்டத்தரணி ஹர்சன நாண யக்கார - நீதி மற்றும் 11

# அநுரவின் அமைச்சரவையில் இரண்டு தமிழ் அமைச்சர்கள்!

கொழும்பு, நவ. 19

இலங்கையின் புதிய அமைச்சரவையில் நேற்று இரண்டு தமிழ் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.



இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும், சரோஜினி சாவித்திரி போல்ராஜ் ஆகியோரே நேற்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் கடற்றொழில், 11

# மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதே எம் பொறுப்பு!

## அமைச்சரவை பதவியேற்பின் பின் ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதே அரசாங்கம் பொறுப்பாகும் என்பதுடன் மக்கள் வழங்கியுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னர் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார். 11

# வரம்பற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாள்க!

## அமைச்சர்களுக்கு அநுர அறிவுரை

கொழும்பு, நவ. 19

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரம்பற்ற அதிகாரத்தை பொறுப்புடன் கையாள வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணத்தைத் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

அந்த அதிகாரத்தை பாதுகாக்க புதிய அமைச்சர்கள் தொடர்ந்தும் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார். 11



# கற்கோவளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேற படையினருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 19

வடமராட்சி பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு இராணுவத் தலைமையகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றிலிருந்து 14 நாட்களுக்குள் குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து வெளியேறுமாறு இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ள நிலையில் இராணுவ முகாமிலிருந்து வெளியேறும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து இராணுவத்தை வெளியேறிமாறு பல அரசியல் கட்சிகள் இணைந்து போராட்டம் நடத்தியிருந்ததுடன் நில அளவை செய்வதற்கும் பல தடவைகள முயற்சிக்கப்பட்டிருந்தது. (அ-05)

# புலமைப் பரிசில் பெறுபேற்றை வெளியிட உயர்நீதிமன்று தடை!

கொழும்பு, நவ. 19

அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட விதத்தை சவாலுக்குட்படுத்தி அதில் பங்குபற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்ததன் பின்னர் இந்த 11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# 311 மில்லியன் ரூபா நட்டஈடு கிடைத்தது!

கொழும்பு, நவ. 19

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய, 311 மில்லியன் ரூபா நட்டஈடாக சட்டமா அதிபர் காரியாலயத்துக்கு கிடைத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் 11

# ஜனாதிபதி அடுத்த மாதம் இந்தியாவுக்குப் பயணம்!

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க டிசெம்பர் மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கொங்கிறீட் சுவர் இடிந்து வீழ்ந்தது!


கிளிநொச்சி, நவ. 19

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் கடந்த 2018ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் பிரதான நீர்ப்பாசன வாய்க் காலில் அமைக்கப் பட்ட கொங்கிறீட் சுவர் உரிய முறையில் அமைக் கப்படாத நிலையில் தற் போது இடிந்து வீழ்ந்துள் ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழ் கடந்த 2015 முதல் 2018ம் ஆண்டுவரை இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட் டுள்ள கட்டுமான வேலை கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் ஏற்கனவே குற்றம் சாட்டி வரு கின்றனர்.

இந்த நிலையில் முரசு மோட்டை ஊரியான் ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்கா லில் 2018ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ள கொங்கி றீட் சுவர்கள் உரிய முறையில் அமைக்கப் படாத நிலையில் தற்போது குறித்த கொங்கிறீட் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இதனை விட பன்னங் கண்டி மற்றும் கோரக் கண்கட்டு ஊரியான் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க் காலில்



தற்போது புதிதாக நிர் மாணிக்கப்பட்ட கொங்கி றீட் சுவர் உரிய முறையில் அமைக்கப்படாது சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டு ஏற்பட்டுள்ளது

இவ்வாறு பெருந்தொகை நிதிகளை செல விட்டு மேற் கொள்ளப்படும் அபிவிருத்திகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் இது தொடர்பாக விவசாயிகள் பல தடவை சுட்டி காட்டிய போதும் துறைசார் அதிகாரிகள் அசமந் தப் போக்கை காட்டி வருவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

# ரவி செனவிரத்ன தாக்கல் செய்த உரிமை மீறல் மனு நிராகரிப்பு!

கொழும்பு, நவ. 19

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ரவி செனவிரத்னவினால் தாக் கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித் துள்ளது.

வாகன விபத்துச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பை கோரி அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அதன்படி நேற்று இந்த மனு எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் பிரியந்த பெர் னாண்டோ ஆகிய மூவரடங் கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப் பட்டிருந்தது

பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்த பிரதிவாதிகள் சார் பில் ஆஜரான பிரதி சொலி சிட்டர் ஜெனரல் டிஸ்னா வர்ணகுல, இந்த மனு உயர்நீதி மன்ற விதிகளுக்கு அமைவாக தாக்கல் செய்யப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் முன்வைக்கப் பட்ட உண்மைகளை பரிசீலித்த உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதி கள் கொண்ட அமர்வு, எதிர் மனுதாரர் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை ஏற்று மனு வைத் தள்ளுபடி செய்வதாக தீர்மானித்தது.

இந்த மனுவில் பிரதிவாதிக ளாக பொலிஸ் மா அதிபர், வெள்ளவத்தை பொலிஸ் நிலைய கட்டளைத் அதிகாரி மற்றும் அதிகாரிகள் குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 19

நாட்டில் டெங்கு நோயா ளர்களின் எண்ணிக்கை அதிக ரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக் குள் 44,000 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட் டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 11,078 ஆகும்.

கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட் டங்களிலிருந்தும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகி யுள்ளனர்.

இதேவேளை, இவ்வருடத் தின் இதுவரையான காலப்பகு திக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகச் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள் ளது. (அ)

# விஜித ஹேரத் கடமைகளை ஏற்றார்

கொழும்பு, நவ. 19

புதிய அமைச்சரவையின் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சராக பதவிப்பிரமா ணம் செய்து கொண்ட விஜித ஹேரத் நேற்று கடமைகளை பொறுப்பேற் றுக்கொண்டார்.



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று காலை புதிய அமைச் சரவை அமைச்சர்கள் ஜனாதி பதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமா ணம் செய்து கொண்டனர்.

இத்தகைய பின்னணியி லேயே அமைச்சர் விஜித ஹேரத் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள் ளார். இந்த நிகழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளின் பங்கேற்பு டன் எளிதாக இடம்பெற் றுள்ளது.

இவர் இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் அதிகபடியான விருப்பு வாக்குகளை பெற்று இலங்கையில் வரலாற்று சாத னையை பதிவு கொண்டுள்ள மையும் சிறப்பம்சமாகும். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் மற்றொரு அமெ. கப்பல்

கொழும்பு, நவ. 19

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான மற்றுமொரு போர்க்கப்பல் நேற்று திங்கட் கிழமை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

சேவை மற்றும் வழங்கல் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்காக வருகை தந்த யு.எஸ். எஸ். ஸ்புருன்ஸ் கப்பல் இலங்கை கடற்படை மரபுக ளுக்கேற்ப வரவேற்கப்பட்டது.



கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள ஏவு கணை எதிர்ப்பு வகைக் கப்ப லான யு.எஸ்.எஸ். ஸ்பு ரூன்ஸ் 160 மீற்றர் நீளமு டையதாகும். 334 பணி யாளர்களைக் கொண்டுள்ள இக்கப்பலின் கப்டனாக தோமஸ் அடாம்ஸ் செயற் படுகின்றார்.

இக்கப்பல் சேவை மற் றும் வழங்கல் தேவைகளை நிறைவு செய்து கொண்டு இன்று நாட்டிலிருந்து புறப் படவுள்ளது. (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களைப் பெற வசதிகள்

கொழும்பு, நவ. 19



பத்தாவது பாராளுமன்றத் தின் முதலாவது கூட்டத் தொடரின் முதலாவது கூட் டத்தை நடத்துவதற்காக, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்க ளையும் பெறுவதற்கு பாரா ளுமன்ற இணையத்தளம் வழியாக உரிய தகவல்களை உள்ளிடும் வசதி ஏற்படுத்தப் பட்டிருப்பதாக அறிவித்த லொன்றை வெளியிட்டு பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரி வித்துள்ளார்.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாராளுமன்ற இணை யத்தளத்தின் முகப்பு பக்கத்தில் உள்ள தகவல் இணைப்பில் நுழைந்து உரிய தக வல்களை பூர்த்தி செய்யுமாறு பாராளு மன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள் வதாகவும், தகவல்களை வழங்குவதற் கான மாற்று வழியாக இந்த இணைப்பி லிருந்து பதிவிறக்கம் செய்யக் கூடிய படிவத்தை நிரப்பி வழங்க முடியு மென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதல் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை எளிதாக்குவதற் காக, "பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கான தகவல் கரும பீடம்" இன்று மற்றும் நாளை ஆகிய தினங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை பாராளுமன்ற வளாகத்தில் செயல்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தகவல்கள் மற்றும் ஆவ ணங்களை வழங்குதல், பாராளுமன்ற உறுப்பினர்களின் அடையாள அட்டைக் கான புகைப்படங்களை எடுத்தல் மற் றும் இலத்திரனியல் வாக்களிப்பு நோக் கத்திற்காக கைரேகைகளை பெறு தல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் பாராளு மன்ற செய லாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.11.2024 செவ்வாய்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சுமந்திரனின் தேவை

பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியின் வியக்கத்தக்க வெற்றிக்கு அடுத்ததாக கவனத்தை ஈர்த்த நிகழ்வு என்றால் அது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனின் தோல்வியேயாகும். தமிழ் அரசுக் கட்சியே இலங்கை தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கம் என்பதால் அவர்கள் வழமைபோன்று தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கையில் சுமந்திரன் தனது வெற்றியில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார். ஆனால் தோல்வியை தவிர்க்க முடியாத அளவுக்கு நிலைவரங்களில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

கணிசமான காலமாக ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் அரசு கட்சிக்குள் பலரும் கூட சுமந்திரனுக்கு எதிரான பிரசாரங்களை தீவிரப் படுத்திவந்தனர் என்பது சகலருக்கும் தெரியும். தமிழ்க் கட்சிகளுக்கு வேறு விடயங்களில் ஒற்றுமை இல்லாவிட்டாலும் சுமந்திரனுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவை ஒருமித்து நின்றன. தாங்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகாவிட்டாலும் பரவாயில்லை, சுமந்திரன் தேர்தலில் தோற்றால் அதுவே தங்களுக்கு பெரிய வெற்றியாக இருக்கும் என்ற தோரணையில் பல தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சுக்களும் செயல்களும் அமைந்திருந்தன என்பது ஒன்றும் இரகசியமானது இல்லை.

வடக்கில் இருந்து புதிய பாராளுமன்றத்துக்கு செல்பவர்களில் சுமந்திரனுக்கு இணையான பங்களிப்பைச் செய்யக்கூடியவர் என்றால் அவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாத்திரமே. ஆனால், அவரின் கோட்பாட்டுப் பிடிவாதம் பாராளுமன்ற விவகாரங்களில் பரவலான விவகாரங்களில் அவர் பங்களிப்புச் செய்வதற்கு இடையூறாக இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

கோட்பாட்டு உறுதியுடனான "சமகாலத்தில் நடைமுறைச் சாத்தியமில்லாத" சில அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தால் மாத்திரமே கொழும்பு அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவது குறித்து பரிசீலிக்க முடியும் என்ற பொன்னம்பலத்தின் நிலைப்பாட்டு தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துக்கு ஏற்புடையதாக இருக்காது.

இந்த இடத்தில்தான் சுமந்திரனின் தேவையின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைச் சமரசம் செய்யாமல் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துடன் சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைக்கு பொருத்தமான முறையில் தென்னிலங்கையுடனும் சர்வதேச சமூகத்துடனும் ஊடாட்டங்களைச் செய்வதில் மிகவும் இராஜதந்திரமான அணுகுமுறை ஒன்றை சுமந்திரன் கடைப்பிடித்து வந்திருக்கிறார். அவரின் தோல்வியை இன்றைய தமிழர் அரசியலுக்கு ஒரு பின்னடைவு என்று நிதானமாகச் சிந்திக்கும சிங்கள அரசியல்வாதிகளில் பலரும் கூட உணருகிறார்கள்.

சுமந்திரனின் இந்த அணுகுமுறை அவருக்கு ஆதரவாளர்களையும் எதிரிகளையும் சம அளவில் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

தேர்தல் தோல்விக்கு பின்னரும்கூட தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கும் சுமந்திரன் புதிய அரசியல் சூழ்நிலையில் தனது பங்களிப்பு குறித்து தெளிவாக வரையறுத்துக்கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.

'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்டு இடைக்கால அறிக்கையுடன் நடுவில் நின்றுபோன புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை நிறைவுசெய்யப் போவதாக ஜனாதிபதி திஸநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருக்கிறார். அந்த செயன்முறைகளில் பயனுறுதியுடைய துடிப்பான பங்களிப்பைச் செய்த சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லாவிட்டாலும் தொடர்ந்தும் தனது நிபுணத்துவத்தையும் சேவையையும் வழங்க முடியும். புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படும் போது சுமந்திரன் நிச்சயமாக ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வகிபாகத்தைக் கொண்டிருக்க முடியும் என்று 'ஈழநாடு' உறுதியாக நம்புகிறது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்."

- பொ. ஐங்கரநேசன்
(தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்)

# தர்மபுரம் விபத்தில் இரண்டு பேர் படுகாயம்

கிளிநொச்சி, நவ. 19

ஏ 35 பிரதான வீதியில் தர்மபுரம் பொலிஸ் நிலையம் முன்பாக. நேற்று இடம் பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் விசுவமடு பகுதியில் இருந்து தருமபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தரணிக்குளம் மாணவர்கள் சாதனை

வவுனியா, நவ. 19

வவுனியா தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய மாணவர்கள் அகில இலங்கை கர்நாடக சங் கீத பல்லிய வாத்திய பிருந்தா போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளனர்.



இப்போட்டி கடந்த வாரம் திருகோணமலை சிறி கோணஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

தேசிய ரீதியில் இடம் பெற்ற இந்த சங்கீத பல்லிய வாத்திய பிருந்தா போட்டியில் வவுனியா வடக்கு வலயம் சார்பாக பங்குபற்றிய தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம் வரலாற்றில் முதற் தடவையாக முதலாம் இடம் பெற்றது.

மிகவும் பின்தங்கிய கிராமப் புறத்திலுள்ள இப்பாடசாலையில் ஆரம்பத்தில் இசை வாத்தியங்கள் பற்றிய முன்னைய அனுபவமோ பயிற்சியோ இல்லாத நிலையில் 12 மாணவர்களுக்கும் வழங்கப்பட்ட கடும் பயிற்சியின் மத்தியில் இந்த வெற்றி பெறப்பட்டுள்ளது.

இதன் மூலம் இப் போட்டியில் பங்குபற்றிய 12 மாணவர்களும் வெற்றி பெற்று பாடசாலைக்கும் வடக்கு வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (அ)

# அநுராதபுரத்தில் 2 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 19

அநுராதபுரம், ஹபரணை பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் குருநாகல், இப்பாக முவ பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடைய நபராவார். சந்தேக நபரிடமிருந்து 02 கிலோ 50 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக ஹபரணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பதுளை - பசறை வீதியில் மண்சரிவு


கொழும்பு, நவ. 19

பதுளை - பசறை லுனுகல ஏ5 வீதியின் ஒத்தேகடை பகுதியில் நிலச்சரிவு காரணமாக போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

மண் மற்றும் கற்கள் வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியின் சுமார் 60 மீற்றர் நீளமான பகுதி மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதியின் போக்குவரத்து தடைப்பட்டதன் காரணமாக பதுளையில் இருந்து பிபில, மட்டக்களப்பு, மொனராகலை, அம்பாறை, மஹாஓயா ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நெருக்கம் உண்டாகும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என வருந்துவீர்கள். விமர்சனங்களை தவீர்ப்பது நல்லது.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். முன்னேறும் நாள்.

**சிம்மம்**
உங்களுடைய ஆலோசனை ஏற்கும்படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும்.


**தனுசு**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
எதிர்பாராத பணவரவுண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**கும்பம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்பு தொல்லை குறையும்.

**மீனம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். தன்னம்பிக்கை குறையும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் அலைச்சல் உண்டு.

# நீரிழிவு நோய் குறித்து விழிப்பூட்டல் செயலமர்வு





யாழ்ப்பாணம், நவ. 19

நீரிழிவு நோய் ஏற்படாமல் தடுப்பது எவ்வாறு என்று யாழ்ப்பாணத்தில் செயலமர்வு நடைபெற்றது.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரும் யாழ். நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இந்த விழிப்பூட்டல் செயலமர்வை நடத்தினர்.

யாழ். நீரிழிவுக் கழகத்தின் செயலாளர் க. கணபதி தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் நீரிழிவு சிகிச்சை நிலைய பொது வைத்திய நிபுணர், மருத்துவர் ம. அரவிந்தன், அதிகரித்து வரும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் நீரிழிவு நோயால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் விளக்கவுரையாற்றினார். இந்தச் செயலமர்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ். நீரிழிவுக் கழகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# தருமபுரத்தில் விபத்து இருவர் படுகாயம்




முல்லைத்தீவு, நவ. 19

ஏ - 35 பிரதான வீதியில் முல்லைத்தீவு, தருமபுரம் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். பரந்தனிலிருந்து - புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் விசுவமடு பகுதியிலிருந்து தருமபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் கிளிநொச்சியில் மரக்கன்று வழங்கல்



கிளிநொச்சி, நவ.19

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் அக்கராயன் கரித்தாஸ் குடியிருப்புக்கு மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண சபை 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. இதனை ஆண்டுதோறும் தவறாது கடைப்பிடித்து வரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இக்காலப்பகுதியில் பொதுமக்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வருவதோடு, மரக்கன்றுகளை நடுகை செய்தும் வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அக்கராயனில் கரித்தாஸ் குடியிருப்பு மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அனைத்து குடும்பங்களுக்கும் மாமரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் உ. நிறோஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சூழல் பாது காப்பு அணியின் துணைச் செய லாளர் த. யுகேஸ் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினர். (எ-05)

# யாழில் ஆடு திருடிய இருவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.19

மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீட்டிலிருந்து ஆடு ஒன்றை திருடிச் சென்ற இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனது வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடு ஒன்று களவாடப்பட்டுள்ளதாக ஆட்டின் உரிமையாளர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டை பொலிஸார், மூளாய் தண்ணீர் தொட்டியடி பகுதியைச் சேர்ந்த 37 மற்றும் 38 வயதுடைய இருவரை கைது செய்தனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாத இறுதியில் மீண்டும் கூடும் தேர்தல் ஆணைக்குழு!

## உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் ஆராயப்படும்

கொழும்பு, நவ. 19

**பொதுத் தேர்தல் முடிவடைந்ததை நிலையில் இம்மாதம் 27ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு மீண்டும் கூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இச்சந்திப்பில் உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளது.

தற்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவும் வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான நிதித் தேவையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இந்த ஆணைக்குழு கூட்டத்தில் தேர்தல் திகதி குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# 2 மாதங்களுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்க!

## அத்தியாவசிய உணவு வர்த்தகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

அரிசி பிரச்னையைத் தீர்க்கும் வகையில் 2 மாதங்களுக்குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு அகில இலங்கை மொத்த மற்றும் சில்லறை அத்தியாவசிய உணவு வர்த்தகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

பாரியளவான வர்த்தகர்களைப் பாதுகாக்காமல் மக்களைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே தற்போது, சந்தையில் நாட்டு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதனுடன் சில பல்பொருள் அங்காடிகள் நாட்டு அரிசி விற்பனையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

அதன்படி குறித்த அங்காடிகளில், நாளொன்றுக்கு ஒருவர் 3 கிலோ கிராமிற்கு அதிகமாக அரிசியைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# பாடசாலை மாணவன் கடலில் மூழ்கி மரணம்

## கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிட சென்றவேளை சம்பவம்

கொழும்பு, நவ. 19

கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிட சென்ற 15 வயதான பாடசாலை மாணவன் ஒருவர் அருகில் உள்ள கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஹற்றன் டிக்கோயா பகுதியை சேர்ந்த குறித்த மாணவன் கல்வி நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் 10 வயதான தனது சகோதரன் மற்றும் தமது மாமாவுடன் கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிடுவதற்காக சென்றுள்ளார்.

அதன்போது அவர்கள் கொழும்பு துறைமுக நகரத்தினுள் நீராடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கடலுக்குள் இறங்கியுள்ளனர்.

அதன்போது 15 வயதான குறித்த மாணவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனை அடுத்து மாணவனின் மாமா பொலிஸ் மற்றும் கடற்படை ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

அதன்போது மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்து காணாமல் போன மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

(அ)

# எதிர்க்கட்சித் தலைவராக சஜித் உரிய முறையில் நடக்கவில்லை

## சரத் பொன்சேகா கருத்து

கொழும்பு, நவ. 19


ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மாத்திரமின்றி எதிர்க்கட்சி தலைவராகவும் சஜித் பிரேமதாஸ உரிய முறையில் செயற்படவில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாகவே நான் அக்கட்சியிலிருந்து விலகினேன்.

அதே போன்று மேலும் பல சிரேஷ்ட உறுப்பினர்களும் கட்சியை விட்டுச் சென்றனர்.



அவர் வகித்த இரு பதவிகளிலும் முறையான நிர்வாகத்தில் ஈடுபடவில்லை.

எனவே அந்த கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் ஹர்ஷ டி சில்வாவை தலைவராக தெரிவு செய்வதிலும் தவறில்லை.

சஜித் பிரேமதாஸவின் தலைமையில் இவர்களால் பலமான தொரு எதிர்க்கட்சியாக செயற்பட முடியாது.

மாற்று வழியொன்று இல்லாதன் காரணமாகவே மக்கள், தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள் கூட இம்முறை தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளனர்.

இனியாவது ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக அதன் பொறுப்பை முறையாக நிறைவேற்ற வேண்டும்-என்றார்.

(அ)

# அரசாங்கத்தின் செயல்பாடுகள் அவதானத்துடன் கண்காணிப்பு

## ரஞ்சித் மத்தும பண்டார கருத்து

கொழும்பு, நவ. 19

அரசாங்கத்தின் செயல்பாடுகளை மிக அவதானத்துடன் கண்காணிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

மக்கள் ஜனநாயக ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாம் மிக அவதானமாக கண்காணித்துக்கொண்டிருக்கிறோம்.

இனி அவர்கள் உறுதியளித்தவற்றை நிறைவேற்ற வேண்டும்.

திருடர்களை கைது செய்ய வேண்டும்.

கொள்ளையடிக்கப்பட்ட அரச சொத்துகளை மீளப் பெற வேண்டும்.

நாம் எதிர்க்கட்சி என்ற வகையில் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

மக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும்.


அதற்காக பொறுப்புடன் செயற்படுவோம்-என்றார்.(அ)

# தெற்கு கட்சிகள் வடமாகாண மக்களை கவரக்கூடிய சூழல் உருவாகவேண்டும்!

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து

கொழும்பு, நவ. 19

தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள், வடக்கு மக்களை கவரக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்ற மஹிந்த ராஜபக்ஷவின் கனவு தற்போதைய அரசாங்கத்தின் வெற்றியின் மூலம் நனவாகியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும், நாட்டை மீண்டும் பிரிவினைவாதத்திற்கு இட்டுச் செல்லும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பொதுஜன பெரமுன இடமளிக்காது என நாமல் ராஜபக்ஷ கூறினார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஒரு இலட்சம் தனியார்துறை ஊழியர் வாக்களிக்கவில்லை

கொழும்பு, நவ. 19

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் சுமார் ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை இல்லாததால் வாக்களிக்க முடியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் விடுமுறை எடுக்க முடியாமல் தவித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்த தனியார் துறை சார்பில் 12 நிறுவனங்களின் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியாகவும் நியாயமாகவும் நடந்தது பாராளுமன்றத் தேர்தல்!

## சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, நவ. 19

**2024 பாராளுமன்றத் தேர்தல் அமைதியாகவும் நியாயமாகவும் நடைபெற்று முடிந்ததாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தமது இறுதி அறிக்கையை சமர்பித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இதனை குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க நாட்டுக்கு வருகை தந்திருந்த 10 பேர் அடங்கிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவினால் குறித்த இறுதி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ஏ.எம்.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளின் இறுதி அறிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளன.

10,000 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் இம்முறை பாராளுமன்றத் தேர்தலை கண்காணிக்கும் பணிகளில் ஈடுப்பட்டிருந்தனர்.

அவர்களில் 43 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

10 அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 10,000 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பங்கேற்றிருந்தனர்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு எனப்படும் பெப்ரல் அமைப்பின் சார்பில் 5,000 தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நடமாடும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 8 அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

# கட்சியின் உயர்மட்ட பதவிகளில் மாற்றம்!

## திகாம்பரம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 19

தங்களது கட்சியின் உயர்மட்ட பதவிகளில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தமது சமூக ஊடக பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த அரசியல் மாற்றம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உள்ளது.

அந்தவகையில் புதிய அரசியல் மாற்றத்தினை உள்வாங்கிக் கொண்டு தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியில் விரைவில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.



அதன்படி, மாநாடொன்றை நடத்தி, இளைஞரணி மற்றும் கட்சியின் உயர்மட்ட பதவிகளிலும் புதிய மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு அதிகளவில் வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் எனத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். (அ)

# காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 19

பொலனறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்லேவெவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பொலன்னறுவை, எல்லேவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் ஆவார்.

இந்த முதியவர் காட்டு யானை தாக்கி காயமடைந்த நிலையில் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# வைரஸ் காய்ச்சல் குறித்து அவதானம்!

கொழும்பு, நவ. 19

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக தற்போது சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல் அதிகரித்து வருவதாக சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் தற்போது டெங்கு நோயும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாசிப்பதில் சிரமம், தலைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்புகள் பரவாத வகையில் சுற்றுச் சூழலை வைத்திருக்குமாறும் சுகாதார தரப்பினரைப் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார். (அ)

# சிறப்பான திட்டங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, நவ. 19

நாட்டின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவேன். ஒத்துழைப்பு வழங்க அரசாங்கத்துடன் ஒன்றிணைய வேண்டிய அவசியம் கிடையாது என பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சானக மெதகொட தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு பலமான ஆணையை வழங்கியுள்ளார்கள. மக்களின் ஆணையை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன். ஒத்துழைப்பு வழங்குவதற்கு அரசாங்கத்துடன் ஒன்றிணைய வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது.

தேர்தலில் ஆதரவளித்த மற்றும் ஆதரவளிக்காத மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும்.காலி மாவட்ட மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயற்படுவேன்.

தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர். இந்த மாற்றம் தேசிய நல்லிணக்கத்துக்கான சிறந்த முன்னேற்றமாகும்-என்றார். (அ)

வாழைக்குலையால் வந்த வினை

# இரண்டு பிள்ளைகளின் தந்தை அடித்துக்கொலை !

கொழும்பு, நவ. 19

மாத்தளை, இரத்தோட்டை, நாகுலியத்த பிரதேசத்தில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இரத்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தோட்டை, நாகுலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே கொலை செய்யப்பட்டார்.

ஆயிரம் ரூபா பெறுமதியான வாழைக்குலையை திருடிய சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்டவருக்கும் அயல் வீட்டவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில், வாழைக்குலையை திருடியதாக சந்தேகிக்கப்படும் அயல் வீட்டவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாார் தெரிவித்தனர். (அ)

# மைக்ரோ ரக கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, நவ. 19

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இங்கினியாகல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக கைத்துப்பாக்கி, கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 181 தோட்டாக்களும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதிக்குள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட 77 கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# நவகமுவ வைத்தியசாலையில் தீ!

கொழும்பு, நவ. 19

நவகமுவ பிரதேச வைத்தியசாலையில் நேற்றுக் காலை மருந்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் திடீர் தீ பரவியுள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது, பொலிஸார் தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனங்களை கொண்டு வந்த போதிலும், அதற்குள் அனைத்து மருந்துகளும் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையின் மருந்துக் கடையிலுள்ள மருந்துகள் தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கணக்காய்வு நடத்தப்பட்டதாகவும், மருந்துக் கடை தீப்பற்றியதில் சந்தேகம் இருப்பதாகவும் நவகமுவ பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# வாகன கொள்ளையில் ஈடுபட்ட நபர் கைது!

கொழும்பு, நவ. 19

மஸ்கெலியாவில், சுமார் 83 இலட்சம் ரூபாய் பெறுமதியான வான் ஒன்று கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஹற்றன் வலய குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கஹவத்த பொலிஸ் பிரிவில் ஓபேவத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர் 28 வயதுடைய ஓபேவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைவாகக் குறித்த வான் வவுனியா பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் வலய குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியளித்த விடயங்களை அரசு நிறைவேற்றவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, நவ. 19

**மக்கள் உண்மையை அறிந்துள்ளார்கள் மக்களுக்கு உறுதியளித்த விடயங்களை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பதுளை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நான் மூன்றாவது முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவானதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். என் மீதும் கட்சியின் மீதும் நம்பிக்கை வைத்த மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாக என் மீது அவதூறு பரப்பப்பட்டது. எனினும் உண்மையை அறிந்து மக்கள் என்னைத் தெரிவு செய்துள்ளார்கள்.

புதிய அரசாங்கம் சிறப்பாக செயற்படுமானால் நாம் ஆதரவு வழங்குவோம். திருடர்களைக் கைதுசெய்வதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

மக்கள் புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் எமது ஆலோசனைகளை வழங்குவோம்-என்றார். (அ)

# லொஹான் தம்பதியின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ. 19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட சொகுசு காரை பயன்படுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நேற்று காலை நுகேகொடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிசெம்பர் 2ஆம் திகதி வரையும் அவரது மனைவி நவம்பர் 22 வரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவியான ஷஷி பிரபா ரத்வத்தவுக்குச் சொந்தமான மிரிஹான அம்புதெனிய சாலாவ வீதியிலுள்ள மூன்று மாடி வீடொன்றில் இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசுக் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்படி குறித்த கார் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது அது சட்ட விரோதமான முறையில் பொருத்தப்பட்ட கார் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களுக்கான பிணை கோரிக்கையை நிராக நீதவான் அவர்களை விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பாராளுமன்றில் 146 புதுமுகங்கள்

கொழும்பு, நவ. 19

2024 பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற 196 உறுப்பினர்களில் 146 பேர் முதன்முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளமை வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

நடைபெற்ற 2024 பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 141 ஆசனங்களை பெற்று அமோக வெற்றியீட்டியது.

தேசிய மக்கள் சக்தியில் வெற்றிபெற்ற 141 பேரில் 130 எம்.பி.க்கள் பாராளுமன்றத்துக்கு புதியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட 35 பாராளுமன்ற இடங்களில் எட்டு புதிய எம்.பிக்கள் தெரிவாகியுள்ளனர். 27 பேர் இதற்கு முன்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்தவர்கள்.

பொதுஜன பெரமுன சார்பாக ஒரே ஒரு புதிய எம்.பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல, இலங்கைத் தமிழரசு கட்சி 8 இடங்களைப் பெற்றது. அதில் மூன்று புதிய எம்.பிக்கள் வெற்றி பெற்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகவும் புதிய உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், புதிய ஜனநாயக முன்னணி இந்த ஆண்டு தேர்தலில் மூன்று ஆசனங்களைப் பெற்றது, அவர்கள் அனைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள். (அ)

# நவகமுவ வைத்தியசாலையில் தீ!

கொழும்பு, நவ. 19

நவகமுவ பிரதேச வைத்தியசாலையில் நேற்றுக் காலை மருந்துப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் திடீர் தீ பரவியுள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது, பொலிஸார் தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனங்களை கொண்டு வந்த போதிலும், அதற்குள் அனைத்து மருந்துகளும் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையின் மருந்துக் கடையிலுள்ள மருந்துகள் தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கணக்காய்வு நடத்தப்பட்டதாகவும், மருந்துக் கடை தீப்பற்றியதில் சந்தேகம் இருப்பதாகவும் நவகமுவ பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# சகல சமூகத்தின் நலன் கருதி நாம் ஒன்றாகப் பயணிப்போம்

## ஹக்கீம் அழைப்பு



கொழும்பு, நவ. 19

"ஒற்றுமையுடன் அரசியல் பாதையில் தொடர்ந்தும் பயணிக்க எத்தகைய தடைகளையும், முரண்பாடுகளையும் உருவாக்கிவிடக்கூடாது என்ற புரிதலுடன் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு நாட்டினதும், இங்கு வாழ்கின்ற சகல சமூகத்தினரினதும் நலன் கருதி ஒன்றாகப் பயணிப்போம்" என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள நன்றி தெரிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-இந்த வெற்றிக்காக எனக்கு ஆதரவளித்த கண்டி மாவட்ட உலமாப் பெருமக்கள், ஏனைய சமயத் தலைவர்கள்,அரச மற்றும், தனியார் நிறுவன அலுவலர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் அதற்கும் அப்பால் பொதுவாக எனது அரசியல் செல்நெறியோடு ஒன்றித்துப் பயணிக்கின்ற சகோதர சமூகத்தவர்களான சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாவதாக.

எனது கடந்தகால அரசியல் பணிகளிலும், என்னிலும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து கணிசமான வாக்குகளை எனது வெற்றிக்காக வழங்கியுள்ளீர்கள்.

இந்தத் தேர்தலில் எமது முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை (திகாமடுல்ல), மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிட்டது.

இந்த இரு மாவட்டங்களிலும் வாக்களித்து பாராளுமன்ற பிரதிநிதிகளாக ஒவ்வொருவர் வெற்றிபெறவும், அவற்றில் கட்சிக்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளினூடாக தேசியப் பட்டியல் பிரதிநிதியொருவர் நியமிக்கப்படவும் வழிவகுத்து, எமது தனித்துவம் காத்த கட்சியின் வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வாறே, திருகோணமலை, புத்தளம், குருநாகல், வன்னி ஆகிய மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து அதன் தொலைபேசி சின்னத்திலும் போட்டியிட்டோம்.

அவற்றில் போட்டியிட்ட எமது கட்சி சார்ந்த வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பு கிட்டாவிட்டாலும் கூட, கணிசமான வாக்குகளை அளித்து அவர்களையும் வெற்றி பெறச் செய்ய நோக்கத்துடன் வாக்களித்துள்ளீர்கள்.

மேலும், தேர்தலில் வெற்றி, தோல்வி என்பன இயல்பானவை. நமக்கு அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப் பக்குவம் தேவை. இந்த வெற்றி - தோல்விகள், தலைமைத்துவக் கட்டுக்கோப்புடன் கையாளப்பட வேண்டும்- என்றுள்ளது. (அ)

# மலையக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நாம் ஏற்படுத்துவோம்

கொழும்பு, நவ. 19

சலுகை அரசியல், அடிமை அரசியல் என்பவற்றை நிராகரித்து கொள்கை ரீதியிலான மாற்றத்தை மலையக மக்கள் ஏற்படுத்தியுள்ளனர். எனவே, மலையக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நிச்சயம் நாம் ஏற்படுத்துவோம். மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை சிதைக்கும்வகையில் ஒருபோதும் செயற்படமாட்டோம்."

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "தேசிய மக்கள் சக்திக்கு மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றி மகிழ்ச்சியளிக்கின்றது.

இது மூவின மக்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியாகும். இந்த வெற்றியை நாம் வரவேற்கின்றோம். மாற்றத்துக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் என் சார்பிலும், கட்சி சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நுவரெலியா மாவட்டமானது தேர்தல் காலத்தில் பாரிய இரு கட்சிகளுக்கு வாக்களிக்கப்படும் மாவட்டமாக பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்த நடைமுறை இம்முறை தோல்வி கண்டுள்ளது. எனவே, இந்த வெற்றி பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியது.

சாப்பாடு கொடுத்து, சாராயம் வழங்கி வாக்குகளைப் பெறுவதற்கு சிலர் முற்பட்டனர்.

இவை எவற்றுக்கும் அடிபணியாமல் தம்முடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக மக்கள் கொள்கை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மாற்றத்தினை நோக்கி எமது மக்கள் [illegible]-என்றார்.

# புதிய மாற்றங்களை உள்வாங்கி எம் அரசியல் பயணம் தொடரும்!

கொழும்பு, நவ. 19

புதிய மாற்றங்களை உள்வாங்கி அரசியல் பயணத்தை தொடர்வதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் எமது கூட்டணிக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். பொதுமக்களின் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்து வருகிறோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கும் மக்கள் வழங்கினார்கள். எனினும் அதன் பின்னர் என்னவாயிற்று என்பது எமக்குத் தெரியும்.

புதிய பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களுக்கு கலைக்க முடியாது. ஆதலால் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை நாம் கண்காணிக்கிறோம்.

அதனடிப்படையில் புதிய மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அனைவரையும் அரவணைத்து சிறந்த கட்டமைப்பை உருவாக்குவேன்

## ஏழு அம்ச கோரிக்கை அடிப்படையில் எதிர்கால செயல்பாடுகள் அமையும்



கல்முனை, நவ. 19

**"அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அனைவரையும் அரவ ணைத்து புதுப் பொலிவுடன் பரிணமிக்கும் சிறந்த கட்ட மைப்பை ஏற்படுத்து வேன். மேலும் ஏழு அம்ச கோரிக்கையின் அடிப்படையில் எனது எதிர்கால செயல்பாடுகள் அமையும்"- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவான கோடீஸ்வரனுக்கு

கல்முனையில் வெற்றி விழா - வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் .

அவர் மேலும் கூறுகையில்,

"இம்முறை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாத்து இருக்கின்றீர்கள். தமிழ் அரசுக் கட்சியையும் என்னையும் வெல்ல வைத்து இருக்கிறீர்கள். அந்த வகையில் முதற்கண் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அம்பாறை மாவட்டத்தில் புதுப்பொலிவுடன் ஒரு சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்த இருக்கின்றோம். அதற்கு அனைத்து தமிழ் மக்களையும் அனைத்து தமிழ்க் கிராமங்களையும் இணைத்து ஒன்று சேர்த்து இந்த கட்டமைப்பை உருவாக்க இருக்கிறோம்.

இதன்படி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் பிரதேசங்களுக்கு வந்து மக்களுடன் பேசி இருக்கின்ற பிரச்னைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான வழிவகைகளை திட்டமிட்டு கொண்டிருக் கின்றோம்.

மக்களது வாழ்வியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் என்பனவற்றை மையப்படுத்தி சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

நாங்கள் அமையப்போகும் மத்திய ஆளும் அரசாங்கத்துடன் சிறந்த பேச்சுகளை நடத்தி மக்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் செய்யவுள்ளோம்.

உங்களுடன் இணைந்து தான் எந்த முடிவும் எடுக்கப்படும்.

நான் ஏழு அம்ச கோரிக்கையை மையப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டவன். அந்த ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி எனது எதிர்காலச் செயல்திட்டங்கள் அமைய இருக்கின்றன.

எமது கல்முனை வடக்கு பிரதேச செயலகம், பிரதேச சபைகள், புதிய வலயங்கள் மற்றும் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதை தடுத்தல் போன்ற 7 அம்ச கோரிக்கையை மையப்படுத்தி எனது செயல்பாடு முன்னெடுக்கப்படும்"- என்றார். (எ)

# தமிழ் அரசு தேசிய பட்டியல் தெரிவு பொருத்தம் இல்லை

## பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும்



காரைதீவு, நவ. 19

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உயர் பீடம் கூடி வெளியிட்ட தேசிய பட்டியல் தெரிவு பொருத்தமானதல்ல. அது ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்-இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச கிளையின் தலைவர் கி. ஜெயசிறில் தெரிவித்தார்.

காரைதீவில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அல்லது செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் இழந்த பிரதிநிதித்துவத்தை நாங்கள் மீண்டும் நிலைநாட்டியிருக்கின்றோம். கிழக்கில் ஐந்து ஆசனங்கள் கிடைத்தன. அதாவது தமிழ்த் தேசியம் கிழக்கில் தான் வென்றுள்ளது. வடக்கில் கட்சி தோல்வியடைந்தது என்று எமது ஊடகப் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் கூறியிருந்தார். அது உண்மை.

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய பட்டியல் ஆசனத்தை பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்துக்கு வழங்கியுள்ளனர். இந்தத் தெரிவு பொருத்தமானதாக இல்லை.

குறிப்பாக இந்த நாட்டில் பால்நிலை சமத்துவம் என்கின்ற அடிப்படையிலே பெண்களுக்கும் எமது கட்சியால் ஒரு உரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும் . வடக்கு அல்லது கிழக்கில் அதாவது ஒரு பெண்ணுக்கு இத் தேசிய பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்- என்றார். (எ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

பொத்துவில், நவ. 19

அம்பாறை - பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான ஜெயரட்ணம் நவநேசன் என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கோமாரி காட்டு வெளி பூனைப் போக்குப் பகுதி யில் இடம்பெற்றது .

வயல் காவலுக்காக சென்றபோது காட்டு யானை தாக்கி இவர் உயிரிழந்தார். இவரது சடலம் பொத்துவில் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(எ)





சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டத்திலுள்ள வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் கணித பூங்கா அதிபர் கே. தியாகராஜா தலைமையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

# பணம் கொடுத்து வாக்கு வாங்கும் நிலை இனிவரும் காலங்களில் தொடரக்கூடாது

## உதுமாலெவ்வை வலியுறுத்தல்



கல்முனை, நவ. 19

தேர்தல் காலங்களில் மக்களுக்கு பணத்தையும் பொதிகளையும் வழங்கி தமக்கான வாக்குகளை வற்புறுத்தலின் கீழ் பெற்றுக் கொள்கின்ற கலாசாரம் இனிவரும் காலங்களில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டவர்கள் எமது மாவட்ட மக்களால் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளனர். அது மாத்திரமன்றி எமது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸை இந்தத் தேர்தலில் தோல்வியடையச் செய்ய வேண்டும் என கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் இருந்து செயல்பட்டவர்களும் இத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர் என திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான எம். எஸ். உதுமாலெவ்வை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியையும், கட்சித் தலைமையையும் தோல்வியடையச் செய்ய வேண்டும் என கட்சிக்குள்ளிருந்தும், கட்சிக்கு வெளியில் இருந்தும் பலர் செயல்பட்டனர். அவர்களது கனவு இத்தேர்தலில் பலிக்கவில்லை. கட்சிக்காக பல்வேறு தியாகங்களை நாம் மேற்கொண்டிருக்கின்றோம். எமது தூய எண்ணத்துக்கும், எமது தியாகத்துக்கும் கிடைத்த வெற்றியாகவே நாம் இந்த வெற்றியை பார்க்கின்றோம்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராக இருந்தால் அவர் கட்சிக்கும் சமூகத்துக்கும் விஸ்வாசம் உடையவராக இருக்க வேண்டும். கட்சிக்கும் சமூகத்துக்கும் புறம்பாக செயல்பட்டவர்களையும், ஜனாஸா எரிப்பின்போது சுயநலத்துக்காக செயல்பட்டவர்களையும் இத்தேர்தலின்போது மக்கள் பாடம் புகட்டி நிராகரித்துள்ளனர்.

தற்போது கிடைக்கப் பெற்ற எனது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மூலம் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு இன, மத பேதமின்றி செயல்பட எண்ணியுள்ளேன். பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்றி காணப்படும் பிரதேசங்களுக்கு மிகுந்த கரிசனையுடன் எனது சேவையை மேற்கொள்ளவுள்ளேன். எமது கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களும், கருத்து முரண்பாடுகளுடன் கட்சியை விட்டு தூரமானவர்களும், ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமைப் பட்டு எமது சமூகத்தின் நலனுக்காக செயல்பட வேண்டியுள்ளது. அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு முஸ்லிம்களின் பெரும் சக்தியாக குரல் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்த வேண்டியிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூவின சமூகத்தவர்களும் செறிந்து வாழும் பகுதியாகும். இங்குள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் பல்வேறான பிரச்னைகள் காணப்படுகின்றன. அவ்வாறான பிரச்னைகளை பேச்சுகளின் அடிப்படையில் தீர்த்து வைக்க முன்னின்று செயல்பட வேண்டும். எம்மிடையே உள்ள முரண்பாடுகள் களையப்பட்டு நிரந்தர தீர்வை ஒற்றுமையோடு பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக நாம் அனைவரும் மாற வேண்டும்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாமீது கொடூர தாக்குதல் பலஸ்தீனர்கள் 72 பேர் பலி!

## பிரதமர் இல்லத்தை இலக்கு வைத்ததால் பதிலடியாம்

காஸா, நவ. 19

**காஸாமீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 72 பேர் பலியாகினர். பிரதமரின் இல்லத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு பதிலடியாக இது அமைந்துள்ளது என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.**

வடக்கு காஸாவின் பெய்ட் லாஹியாவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 72 பேர் உயிரிழந்ததாக காஸா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. பலஸ்தீனிய குடிமை தற்காப்புப் பிரிவு, அதன் குழுக்களால் அந்தப் பகுதிக்கு செல்ல முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் காயமடைந்து இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே ஹிஸ்புல்லாவின் உயர்மட்ட ஊடக தொடர்பு அதிகாரி மொகமத் அபிப், மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக வடக்கு இஸ்ரேலில் செசாரியா பகுதியில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காஸா மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)



## உலக அழகியானார் விக்ரோரியா கெயர்

மெக்சிக்கோ, நவ. 19

2024 பிரபஞ்ச அழகி போட்டியில் டென்மார்க்கை சேர்ந்த விக்ரோரியா கெயர் மகுடம் சூடினார்.

மெக்சிக்கோவில் நடந்த 73ஆவது உலக அழகி போட்டியிலேயே 21 வயது விக்ரோரியா கெயர் பட்டம் வென்றார்.

இறுதிச்சுற்றில் நடுவர்களின் கேள்விக்கு, "நீங்கள் எங்கிருந்து வந்தாலும், உங்கள் கடந்த காலம் எதுவாக இருந்தாலும், அதை உங்கள் பலமாக மாற்ற நீங்கள் எப்போதும் தெரிவு செய்யலாம்" என்று விக்ரோரியா கெயர் பதிலளித்தார். இந்த பதிலால் ஈர்க்கப்பட்ட நடுவர்கள் 2024 உலக அழகியாக விக்ரோரியா கெயரை தெரிவு செய்தனர். (எ)

பாகிஸ்தானில் காற்று மாசு உச்சம்

# ஒரே மாதத்தில் 19 இலட்சம் பேர் மருத்துவமனையில் சிகிச்சை!

லாகூர், நவ. 19

பாகிஸ்தானில் காற்று மாசு தீவிரமடைந்துள்ளது. இதனால், மக்களுக்கு சுவாசப் பிரச்னை ஏற்பட்டு வருகிறது. கடந்த மாதம் மட்டும் 19 இலட்சம் பேர் இந்தப் பிரச்னை காரணமாக அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக, பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் காற்றின் தரம் மிக மோசமாகவுள்ளது. அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக மக்கள் கூட்டம் நிரம்பி வழிவதாக கூறப்படுகிறது.

காற்று மாசுபாட்டால் குழந்தைகளும், வயோதிபர்களும் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வரும் நிலையில், பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கல், வாகனப் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடு விதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

எனினும், முக்கிய நகரங்களில் காற்று மாசை கட்டுப்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது. லாகூரில் காற்று தரக் குறியீடு 1000ஐ தாண்டியுள்ளது. சமீபத்தில் முல்டானில் காற்று தரக் குறியீடு 2,000ஐ தாண்டியது. (எ)

# ஐஸ்கிரீம், உணவு, ஹோட்டலுக்கு ரூ.101 கோடி செலவு செய்த கமலா

வாஷிங்டன், நவ. 19

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஐஸ்கிரீம், நட்சத்திர ஹோட்டல், விமானப் பயணங்களுக்காக மட்டும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் 101 கோடி ரூபாய் செலவிட்டுள்ளார்.



கடந்த 5ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் குடியரசு கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் போட்டியிட்டார்.

அவரின் தேர்தல் பிரசாரத்துக்காக ஜனநாயக கட்சி சார்பில் 6, 640 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இதில் ஐஸ்கிரீம், நட்சத்திர ஹோட்டல், விமான பயணங்களுக்காக மட்டும் கமலா ஹாரிஸ் 101 கோடி ரூபாய் செலவிட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையிலான காலத்தில் மட்டும் விமான பயணங்களுக்காக 18. 58 கோடி ரூபாயை கமலா செலவு செய்துள்ளார். இதே காலத்தில் ஐஸ்கிரீமுக்காக 10 இலட்சம் ரூபாயும் உணவு வகைகளுக்காக 10 இலட்சம் ரூபாயும் அவர் செலவு செய்துள்ளார்.

டெலவெயரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் கமலாவும் அவரது ஆதரவாளர்களும் தங்க 53 இலட்சம் ரூபாய் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. (எ)

# இந்திய பிரதமர் மோடிக்கு நைஜீரியாவில் உயர் விருது

அபுஜா, நவ. 19

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நைஜீரிய நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது




கடந்த 17 ஆண்டுகளில் நைஜீரியாவுக்கு இந்தியப் பிரதமர் செல்வது இதுவே முதல் முறை.

இந்தியாவும் நைஜீரியாவும் பல துறைகளில் இணைந்து செயல்பட வேண்டும் என 2007 இல் முடிவு செய்யப்பட்டது. அந்த நட்புறவை மேம்படுத்தும் பேச்சுகளில் பிரதமர் மோடி ஈடுபட்டார். பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் பேச்சுகள் நடந்தன.

இந்த நிலையில் நைஜீரியாவில் பிரதமர் மோடிக்கு அந்த நாட்டின் உயரிய தேசிய விருதான "கிராண்ட் கொமாண்டர் ஆப் தி ஆர்டர் ஆப் தி நைஜர் வழங்கப்பட்டது. விருதை பெற்றபின் பிரதமர் மோடி கூறுகையில், "நைஜீரியாவின் மிக உயர்ந்த விருதை பணிவுடன் ஏற்றுக்கொண்டு, இந்தியாவின் 140 கோடி மக்களுக்கும் அர்ப்பணிக்கிறேன்"- என்றார்.

இது பிரதமர் மோடிக்கு, வெளிநாடு சார்பில் வழங்கப்படும் 17ஆவது சர்வதேச விருதாகும்.

இதற்கு முன் இந்த விருது கடந்த 1969ஆம் ஆண்டில் இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு வழங்கப்பட்டது. (எ)



றைற்றானிக் கப்பல் விபத்து;

# கப்டனுக்கு பரிசாக வழங்கிய கடிகாரம் ரூ.16 கோடிக்கு ஏலம்

லண்டன், நவ. 19

றைற்றானிக் கப்பல் விபத்தில் சிக்கியபோது நூற்றுக்கணக்கானோரின் உயிர்களைக் காப்பாற்றிய கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானுக்கு பரிசாக வழங்கப்பட்ட கடிகாரம் 16 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

றைற்றானிக் நினைவுச் சின்னங்கள் ஏலம் விடப்பட்டதில் மிக அதிக தொகைக்கு வாங்கப்பட்ட கலைப்பொருள் என்ற பெருமையை இந்தக் கடிகாரம் பெற்றுள்ளது.

1912ஆம் ஆண்டு வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் சென்று கொண்டிருந்த றைற்றானிக் கப்பல் திடீரென பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 2,200இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்த நிலையில் 1,500 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 705 பயணிகள் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நிலையில் அவர்களை காப்பாற்றிய பெருமை கப்டன் ஆர்தர் ரோஸ்ட்ரானை சாரும். (எ)

# டெங்கு காய்ச்சலால் ஒரேநாளில் 8 பேர் பலி


டாக்கா, நவ. 19

பங்களாதேஷில் வேகமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலால் ஒரேநாளில் 8 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 994 பேருக்கு புதிதாக டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பங்களாதேஷில் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 173ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, பங்களாதேஷில் நடப்பு ஆண்டில் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 407 ஆக அதிகரித்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அநுர குமாரவின் எழுச்சியும் அமெரிக்காவும்

ஜனதா விமுக்தி பெரமுனவினதும் (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தியினதும் தலைவர் அநுர குமார திசாநாயக்கவை அதிகாரத்துக்கு கொண்டு வந்ததில் அமெரிக்கா அதன் இராஜதந்திர செல்வாக்கின் ஊடாக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்ததாக தெற்காசிய புவிசார் அரசியல் விவகாரங்களில் நிபுணத்துவம் கொண்டவரான பிரபல்யமான பேராசிரியர் எஸ்.டி. முனி கூறியிருக்கிறார்.

இந்தியாவில் உள்ள பிரபல்யமான பல்கலைக்கழகம் ஒன்றில் அண்மையில் நிகழ்த்திய உரையொன்றில் இதை தெரிவித்த அவர், "அநுர திசாநாயக்க தனது எழுச்சிக்காக அமெரிக்காவுக்கும் கொழும்பில் உள்ள அதன் தூதரகத்துக்கும் கடமைப்பட்டவராக இருக்கிறார்" என்று கூறினார்.

பேராசிரியர் முனி தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இலங்கையின் அரசியல் நிகழ்வுப் போக்குகளின் வளர்ச்சியின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தும் அதிகார காரணிகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இலங்கையின் அரசியல் மாற்றங்களில் வெளிநாட்டுச் சக்திகள் பலரும் ஏற்றுக் கொள்வதற்கு தயாராயிருப்பதையும் விட மிகவும் பெரியளவில் செல்வாக்கைக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவரது கருத்துக்கள் குறிப்பாகச் சொல்கின்றன.


திசாநாயக்கவிடம் தனிப்பட்ட ரீதியில் ஏற்பட்டிருக்கும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் பற்றி கூறிய முனி, புரட்சிகர சிந்தனைகளில் இருந்து படிப்படியாக அவர் ஜனநாயக மனச்சார்பு நிலைக்கு நகர்ந்து விட்டதாக குறிப்பிட்டார். "அநுரகுமார திசாநாயக்க இப்போது வித்தியாசமான ஒரு மனிதராக மாறிவிட்டார். ஜனநாயகத்தின மைய விழுமியங்களை விளங்கிக்கொள்ள அவர் முயற்சிக்கின்றார். தனது அனுபவங்களில் இருந்து நிறையவே அவர் கற்றுக் கொண்டிருக்கிறார்" என்று பேராசிரியர் கூறினார்.

இலங்கையின் அரசியல் மாற்றத்தின் வரலாற்றை ஆழமாக ஆராயும் பேராசிரியர் முனி, ஜே.வி.பி.யின் கோட்பாட்டை மாற்றி வடிவமைப்பதில் முக்கியமான ஒருவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விளங்கியதாக கூறுகிறார். "திருமதி குமாரதுங்கவே ஜே.வி.பி.யை அதன் வன்முறை மனநிலையில் இருந்து வெளியே வரச்செய்து ஜனநாயகத்தை நோக்கி பயணம் செய்வதற்கு பயிற்சி கொடுத்தவர்" என்று கூறிய முனி, ஜே.வி.பி.யை அதன் புரட்சிகர வேர்களில் இருந்து பெருமளவுக்கு நடைமுறைச் சாத்தியமான ஜனநாயகப் பாதை நோக்கி வழிநடத்தியதில் திருமதி குமாரதுங்கவின் முக்கிய பாத்திரத்தை ஏற்றுக்கொள்கிறார்.

இத்தகைய நேர்மறையான நிகழ்வுப் போக்குகளை காணக்கூடியதாக இருக்கின்ற போதிலும், இலங்கையின் அரசியல் கட்டமைப்பின் எதிர்காலம் குறித்து முனி நம்பிக்கையீனத்தையே வெளிப்படுத்துகிறார். மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கம் செய்யும் நோக்குடன் இந்தியாவின் தூண்டுதலுடன் கொண்டுவரப்பட்ட ஒரு அரசியலமைப்பு ஏற்பாடான 13 வது திருத்தம் தொடர்பில் அவர் நம்பிக்கையற்றவராக இருக்கிறார்.

"தற்போதைய வடிவில் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது நடைமுறையில் சாத்தியமில்லை. சிறுபான்மைச் சமூகங்கள் தங்களை நாட்டின் இன்றியமையாத சமத்துவமான உறுப்பினர்கள் என்று உணரச்செய்வதற்கு அவர்களின் அக்கறைகளை மானசீகமாக கையாளக்கூடிய புதிய யோசனைகள் குறித்து சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இனம் அல்லது பிராந்தியத்துக்கு அப்பால் சகல குடிமக்களும் இலங்கையர்கள் என்று மெய்யாகவே உணருவதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையின் ஆட்சிமுறை உருமாதிரி விரிவான முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் " என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியா குறித்து கருத்து தெரிவித்த முனி, ஜனநாயக கோட்பாடுகள் மீதான அதன் பற்றுறுதி குறித்து ஐயப்பாடு கிளப்புகிறார். ஊடக நிறுவனங்கள் மீது அதிகரிக்கும் அடக்குமுறையையும் இந்தியாவுக்குள் வேற்றுக் கருத்துக்கள் மீதான ஒடுக்குமுறை ஆகியவற்றை சுட்டிக்காட்டிய பேராசிரியர் முனி, இந்தியா வெளிநாடுகளுக்கு போதனை செய்வதற்கு முன்னதாக நாட்டுக்குள் ஜனநாயக விழுமியங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானதாகும் என்று வலியுறுத்தினார்.



பேராசிரியர்
எஸ்.டி. முனி

"ஜனநாயக விழுமியங்கள் குறித்து மற்றவர்களுக்கு படிப்பிக்க இந்தியா முயற்சிக்கின்றது. ஆனால் முதலில் அது தனது சொந்த எல்லைகளுக்குள் அந்த விழுமியங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்" என்று பேராசிரியர் தனதுரையில் குறிப்பிட்டார்.

பிராந்திய பிரச்சினைகளில் இந்தியா சில சந்தர்ப்பங்களில் முன்னுக்குப்பின் முரணான முறையில் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறை குறித்தும் பேராசிரியர் முனி தனது கருத்தை வெளியிட்டார். அயல்நாடுகளுக்கு உதவுவதற்கு இந்தியா மேற்கொள்கின்ற முயற்சிகள் அவ்வப்போது ஏதோ ஒரு வகையில் முன்னுணர்ந்து கூறமுடியாதவையாக அமைந்துவிடுகின்றன என்று அவர் கூறினார்.

"பிராந்திய நெருக்கடிகளில் இந்தியாவின் நிலைப்பாடு அதன் அயல்நாடுகளின் மெய்யான தேவைகளுக்கு ஆதரவு அளிப்பதற்கான தெளிவான ஈடுபாடாகவோ அல்லது கடப்பாடாகவோ இருப்பதை காட்டிலும் பெருமளவுக்கு நிலையற்ற அணுகுமுறையினால் வடிவமைக்கப்படுவதாக அமைவது போன்று தோன்றகிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

மியன்மாரின் றொஹிங்கியா நெருக்கடியையும் பூட்டானில் இருந்து தப்பியோடிவரும் நேபாள அகதிகளின் நிலைவரத்தையும் கையாளுவதில் இந்தியா கடைப்பிடித்த அணுகுமுறைகளை உதாரணங்களாக எடுத்துக்கூறிய பேராசிரியர், பிராந்திய கொள்கை தொடர்பில் இத்தகைய அணுகுமுறை தெற்காசியாவில் ஒரு தலைமைத்துவ நாடு என்ற வகையில் இந்தியாவின் மதிப்பை மலினப்படுத்தியாருக்கக்கூடும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார். ●

# அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பாராளுமன்றுக்கு!

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலினூடாக அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் அரசியல் பின்புலமற்ற ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப் படுத்தி போட்டியிட்டவர்கள்.

1931 ஆம் ஆண்டில் அப்போதைய சட்டமியற்றும் சபையாக இருந்த அரசாங்க சபைக்கு அடெலின் மொலமுரே தெரிவாகியிருந்தார்.

இலங்கை பாராளுமன்றத்துக்குத் தெரிவான முதல் பெண் என்ற பெருமையும் அவரையே சேரும்.

இலங்கை ஜனநாயக குடியரசில் 1989 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 06 சதவீதத்தை விடவும் குறைவாகவே இருந்தது.

இலங்கை வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு அதிகளவான பெணகள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுகளாக 1989, 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளைக் சுட்டிக்காட்ட முடியும். குறித்த வருடங்களில் தலா 13 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

மேலும்,2020 ஆம் ஆண்டு இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தல் ஊடாக 9 ஆவது பாராளுமன்றத்துக்கு 12 பெண் பிரதிநிதிகள் தெரிவாகியிருந்தனர்.

ஆனால் இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 21 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமை மிகவும் சிறப்புக்குரியது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹரிணி அமரசூரிய, கௌசல்யா ஆரியரத்ன, சமன்மலி குணசேகர ஆகியோர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹேமாலி குணசேகர களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலந்தி கொட்டஹச்சி, ஒஷனி உமங்கா ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, மலையகத்திலிருந்து இம்முறை 03 தமிழ் பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கும் தேர்வாகியுள்ளமை மிகவும் விசேட அம்சமாகும்.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட துஷாரி ஜயசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சமிந்திராணி கிரியெல்லவும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலிருந்து, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப் படுத்தி போட்டியிட்ட தீப்தி வாசலகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ரோஹினி குமாரி கவிரத்னவும் தெரிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அனுஷ்கா தர்ஷனி திலகரத்ன மற்றும் கிருஷ்ணன் கலைச்செல்வி ஆகியோரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட அம்பிகா சாமுவேலும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் போட்டியிட்ட ஹசாரா லியனகேவும், மாத்தறை மாவட்டத்திலிருந்து சரோஜா சாவித்திரி போல்ராஜ் ஆகிய இருவரும் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலுஷா லக்மாலியும் சாகரிக்கா கங்காணி கேகாலை மாவட்டத்திலும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து முது ரத்வத்தே, குருநாகல் மாவட்டத்தில் கீதா ஹேரத், புத்தளம் மாவட்டத்தில் ஹிருனி மதுஷா விஜேசிங்க மற்றும் மொனராகலை மாவட்டத்திலிருந்து சதுரி கங்காணி ஆகியோரும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவின்...

நீரியல் வள மற்றும் கடல் வளங்கள் அமைச்சராக இராமலிங்கம் சந்திரசேகர னும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜி சாவித்திரி போல் ராஜூம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (அ)

## புலமைப்பரிசில்...

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங் கப்புலி மற்றும் மகிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர்நீதி மன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது. (அ)

## ஜனாதிபதி...

செய்து கொண்டதன் பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியப் பிரதமர் நரேந் திர மோடிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் இதன் போது சந்திப்பொன்று இடம்பெறுவுள்ள தாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வரம்பற்ற...

மக்களின் கடின உழைப்பு மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் வெற்றியடையச் செய்யும் வகையில் நல்லாட்சி இருக்க வேண்டும்.

வெற்றி பெரியது, அந்த வெற்றிக்காக நம் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகள் சமமானவை-என்று தெரிவித்தார். (அ)

## 5முக்கிய...

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

06) சரோஜா சாவித்ரி போல்ராஜ் - மக ளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்.

07) கே.டி லால் காந்த - விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

08) அநுர கருணாதிலக - நகர அபி விருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீட மைப்பு அமைச்சர்.

09) ராமலிங்கம் சந்திரசேகரன் - கடற்றொழில் மற்றும் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்.

10) பேராசிரியர் உபாலி பன்னிலகே- கிராமிய அபிவிருத்தி,சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்.

11) சுனில் ஹந்துன்னெத்தி-கைத் தொழில் மற்றும் தொழில் முயற்சி யாண்மை அபிவிருத்தி அமைச்சர்.

12) ஆனந்த விஜேபால - பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளு மன்ற அலுவல்கள் அமைச்சர்.

13) பிமல் ரத்னாயக்க - போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள் , துறைமுகங் கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சர்.

14) பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.

15) டொக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ - சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்.

16) சமந்த வித்யாரத்ன - பெருந் தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர்.

17) சுனில் குமார கமகே-இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

18) வசந்த சமரசிங்க - வர்த்தக, வாணிப , உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்.

19) பேராசிரியர் கிரிசாந்த அபே சேன - விஞ்ஞான,தொழில்நுட்ப அமைச்சர்.

20) பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னான்டோ - தொழில் அமைச்சர்

21) பொறியியலாளர் குமார ஜய கொடி - வலுசக்தி அமைச்சர்

22) டொக்டர் தம்மிக பட்டபெந்தி - சுற்றாடல் அமைச்சர்

இந்த நிகழ்வில் ஜனாதிபதி செயலா ளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க வும் கலந்துகொண்டார். (அ)

# சமநிலையான அணுகுமுறையை நாணய நிதியம் பின்பற்றவேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார கோரிக்கை





கொழும்பு, நவ. 19

பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக் கடிகளை கவனத்திலெடுக்கும் சமநிலை யான அணுகுமுறையை சர்வதேச நாணயநிதியம் பின்பற்ற வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதி நிதிகள் குழுவினரை நேற்று சந்தித்த வேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்

பொதுமக்கள் எதிர்கொள்ளும் கடுமையான நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கத்தின் அர்ப்ப ணிப்பை வெளியிட்டுள்ள ஜனாதிபதி, பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக் கடிகளை கவனத்திலெடுக்கும் சம நிலை யான அணுகுமுறையான சர்வதேச நாணய நிதியம் பின்பற்றவேண்டும் என தெரிவித்துள்ளார்.

தனது தலைமைத்துவத்தின் கீழ் செலவினங்களுக்காக ஒதுக்கீடுகள் பய னுள்ள விதத்தில் செலவிடப்படும் என தெரிவித்துள்ள அவர், சிறுவர் வறுமை,போசாக்கின்மை போன்ற வற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும் மாற்று திறனாளிகளிற்கு சிறந்த ஆதரவு வழங்கப்படும் எனவும் கூறினார்.

ஊழலுக்கு எதிராக போரிடுவது குறித்த தனது அரசாங்கத்தின் அர்ப் பணிப்பை ஜனாதிபதி வெளியிட் டுள் ளார். (அ)

## 311 மில்லியன்...

நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தாக்கல் செய் யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதனை நீதிமன் றத்திற்கு அறிவித்தார்.

அடுத்த அமர்வில் பாதிக்கப்பட்டவர் களுக்கு இழப்பீடு வழங்கப்பட்ட விதம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப் பிக்குமாறும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுக்கு நீதியரசர்கள் குழாம் அறிவித்தது.

பின்னர் சம்பந்தப்பட்ட மனுவை பெப்ரவரி 27ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தர விடப்பட்டது.

இந்த மனு முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா மற்றும் ஏ. எச்.எம்.டி. நவாஸ் ஆகிய மூன்று பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன் அழைக்கப் பட்டது. (அ)

## மக்களின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்களின் எதிர்பார்ப்புக் களையும் அபிலாஷைகளையும் நிறை வேற்றுவதே அரசாங்கம் பொறுப்பாகும் என்றும் ஊழல் அற்ற ஆட்சியை முன் னெடுப்பதே எமது நோக்கமாகும். நாட் டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரும் பான்மை அதிகாரம் ஆட்சியாளர்க ளுக்கு கிடைத்தது.

அதிகாரத்தின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே அரசாங் கத்தின் நோக்கமாகும். மக்கள் அழங்கி யுள்ள அதிகாரமானது பொறுப்பு வாய்ந்தது. மக்களுக்கும் பொறுப்பு உள்ளது. எந்தவொரு அதிகாரம் வழங் கப்பட்டாலும் அதில் பொறுப்புடன் செயற்படவேண்டியுள்ளது.

அத்துடன் பல புதியவர்கள் இம் முறை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு தொழில் சார்ந்தவர்களை மக்கள் தெரிவு செய்துள்ளனர். மக்களின் எதிர்பார்ப்புக் களை பூர்த்தி செய்யக்கூடியவர்கள் என்ற நம்பிக்கையுடனேயே மக்கள் அவர்களை தெரிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் எமக்கு கிடைத்த பாரிய வெற்றியின் ஊடாக எமது பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் நாம் வெற்றிகரமான முறையில் அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள் ளோம் - என்றார். (அ)

# விஜிதவுக்கு ஜெய்சங்கர் வாழ்த்து

கொழும்பு, நவ. 19

விஜித ஹேரத், இலங்கையின் வெளி விவகார அமைச்சராக மீண்டும் தெரிவா னமைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வாழ்த்துக் கூறியுள்ளார்.

அவர் தமது எக்ஸ் தளத்தில் இந்த வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிகார அமைச்சரு டன் இணைந்து பணியாற்றவும், முக்கிய விடயங்களில் ஆதரவு வழங்கத் தயாராக விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன் இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையிலான பங்காளித்து வத்தை மேலும் வலுப்படுத்த இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ள விஜித ஹேரத் தனது கடமை களைப் பொறுப்பேற்றுள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் அவர் இன்று கடமைகளைப் பொறுப்பேற்றுள் ளார். அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு இந்த நிகழ்வில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பெண் சபாநாயகரை நியமிக்க தேசிய மக்கள் சக்தி ஆலோசனை

கொழும்பு, நவ. 19

புதிய பாராளுமன்றத்தில் சபை முதல்வராக அமைச்சர் விஜித ஹேரத்தை யும் ஆளுங்கட்சியின் கொறடாவாக கே.டி.லால் காந்தவையும் நியமிக்க தேசிய மக்கள் சக்தி ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலா வது அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற உள்ளது. காலை 10.00 மணிக்கு சபை அமர்வுகள் ஆரம்மாகி சபாநாயகர் மற்றும் பிரதிச் சபாநாயகர் தெரிவு இடம்பெறும். அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் இடம்பெற்று பாராளுமன் றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவுக்கு சம்பிரதாய பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டு ஜனாதிபதி யின் கொள்கைப் பிரகடன உரைக்காக மீண்டும் காலை 11.30 மணிக்கு பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும்.

இதேவேளை, புதிய சபாநாயகராக பெண் ஒருவரை நியமிக்கும் ஆலோச னைகளை தேசிய மக்கள் சக்தி நடத்தி யுள்ளதாக அறிய முடிகிறது.

நாளை ஆளுங்கட்சியின் பாராளு மன்ற குழுக் கூட்டத்தை நடத்த உத் தேசித்துள்ளதுடன், இதன்போது இந்த விடயம் இறுதி செய்யப்படும் எனவும் தெரியவருகிறது. (அ)

# ஓடும் பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்து பஸ் நடத்துநர் பலி!

கொழும்பு, நவ. 19

கடுவலை - கொள்ளுப்பிட்டி வீதியில் கொஸ்வத்த சந்திக்கு அருகில் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மிதிபலகையி லிருந்து கீழே தவறி வீழ்ந்து பஸ் நடத்து நர் உயிரிழந்துள்ளதுடன் பயணி ஒருவர் காயமடைந்துள்ளதாக தலங்கம பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பஸ் நடத்துநரும் காயம டைந்த பயணியும் பஸ்ஸின் பின்புறத்தில் உள்ள மிதிபலகையில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென பஸ் ஸின் மிதிபலகையிலிருந்து கீழே தவறி வீழ்ந்துள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த இருவ ரும் கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பஸ் நடத்துநர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை தலங்கம பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சபாநாயகராக நிஹால் கலப்பதி?

கொழும்பு, நவ. 19

அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து பாராளு மன்றத்திற்குத் தெரிவாகியுள்ள நிஹால் கலப்பதியை புதிய பாராளுமன்ற சபாநாயகராக நியமிக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2024 பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இதன்படி, புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது.

ஆயினும், நிஹால் கலப்பதிக்கு அமைச்சு பதவி எதுவும் வழங்கப்படவில்லை.

1994ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று நிஹால் கலப்பதி பாராளுமன்றம் பிரவேசித்தார்.

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அம்பாந் தோட்டை மாவட்டத்தில் நிஹால் கலப்பதி 125,983 வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்திலிருந்து அதி கூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்க்கட்சி தலைமை ஹர்ஷ டி சில்வாவுக்கு?

## சஜித் அணிக்குள் கடும் குழப்பம்

கொழும்பு, நவ. 19

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்பட வேண்டும் என அழுத்தங்கள் பிரயோகிக் கப்பட்டுவதால், ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக் கின்றன.

சஜித் பிரேமதாஸ தொடர்ச்சியாக இரண்டு ஜனாதி பதித் தேர்தல்களிலும், இரண்டு பொதுத் தேர்தல்களி லும் தோல்வியடைந்த நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சஜித் பிரேமதாஸ இரண்டு சந்தர்ப்பங்களி லும் ஆளும் கட்சிக்கு 2/3 அதிகாரம் கிடைப்பதை தடுக்க முடியவில்லை.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவரின் அதிகாரத்தின் கீழ் பல விடயங்களை பாராளுமன்றத்தில் தலையிட்டு விவாதித்தபோதும் அது மக்களை கவரவில்லை. இந்த செயற்பாடுகள் சஜித்தை ஆதரிக்கும் மக்கள் மத்தியில் விரத்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கமைய பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வாவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதன் மூலம் அரசாங்கத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடி யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று கட்சித் தக வல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 19 மருத்துவர்கள் இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவு!

கொழும்பு, நவ. 19

நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகி யுள்ள 225 உறுப்பினர்களில் 18 வைத்தியர்கள் உள்ள டங்குகின்றனர்.

இவர்களில் 16 பேர் தேசிய மக்கள் சக்தியை பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர்.

வைத்தியர்களான மொஹமட் ரிஸ்வி சாலி, கிறிசாந்த சில்வா அபேசேன, நிஹால் அபேசிங்க, நளிந்த ஜய திஸ்ஸ, நிசாந்த சமரவீர சாலிய சதருவன், ரணசிங்க, ஜகத் விக்கிரமரத்ன, ஜனக சேனாரத்ன, நாமல் சுதர்ஷன, நிஷாந்த ஜகத் குமார, முதித விஜயமுனி, பிரசன்ன குணசேன, மதுர செனவிரத்ன, பி.எச் தம்மிக, ஸ்ரீபவா னந்தராஜா ஆகியோர் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், சுயேச்சைக் குழு சார் பில் போட்டியிட்ட வைத்தியர் இராமநாதன் அச்சுனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக மருத்து வர் சத்தியலிங்கமும் பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார். (அ)

# ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் கட்டியமைக்க ரணில் புது வியூகம்!

## கடந்த சனியன்று முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு, நவ. 19

**கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக அங்கம் வகித்தவர் களை ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளதாக அக் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**


இதேவேளை, கடந்த சனிக் கிழமை முன்னைய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பல இளம் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக் கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.


இதன்போது, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

காஞ்சன விஜேசேகர, பிரமித பண்டார தென்னக்கோன், அனு ராத ஜயரத்ன மற்றும் முன்னாள் அமைச்சர்களுடன் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் முன் னாள் அமைச்சர் சாகல ரத்நாயக் கவும் கலந்து கொண்டார்.

அந்தக் கலந்துரையாடலின் போதே கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக அங்கம் வகித்த வர்களை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (அ)

# தமிழ்மொழியில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் சந்திரசேகரன்!





கொழும்பு, நவ. 19

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்ச ராக இராமலிங் கம் சந்திரசேகரன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் தமிழில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையி லான தேசிய மக்கள் சக்தி அரசின் புதிய அமைச்ச ரவை நேற்று பதவியேற்றது.

புதிய அமைச்சரவையில் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நிய மிக்கப்பட்ட இராமலிங்கம் சந்திர சேகரன் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க முன்னிலையில் பதவியேற் றார்.

இதன்போது தமிழ் மொழியில் இராமலிங்கம் சந்திரசேகரன் சத்திய பிரமாணத்தை செய்துகொண்டார். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் வெற்றி அரசியல் சுனாமி!

## திலும் அமுனுகம கருத்து

கொழும்பு, நவ. 19

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி அரசியல் சுனாமி என்றே குறிப்பிட வேண்டும். அதிகளவான ஆசனங் களை கைப்பற்ற எதிர்பார்த்தோம். இருப்பினும் ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை என சர்வஜன அதி காரம் கட்சியின் தேசிய அமைப் பாளரும், முன்னாள் அமைச்சரு மான திலும் அமுனுகம தெரி வித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்தி வரலாற்றில் என்றுமில்லாத வகை யில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இதனை அரசியல் சுனாமி என்றே குறிப்பிடவேண்டும். புதிய மக்களா ணையை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம்.

ஜனாதிபதி அநுரகுமார மீது அதீத நம்பிக்கை கொண்டு நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்தியுள்ளார்கள்.

மக்களின் எதிர்பார்ப்புக்கமைய சிறந்த முறையில் அரசாங்கம் செயற் பட வேண்டும் என்று வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷவின் தவறான அரசியல் தீர்மானங்க ளினால் தான் இந்தளவுக்கு பாரிய தொரு அரசியல் மாற்றம் ஏற் பட்டுள்ளது.

நாட்டுக்கு சேவையாற்றியவர் களை மக்கள் தெரிவு செய்வார்களா யின் ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதியாக பதவி வகித்தி ருப்பார். நடைமுறை விடயங்களை கருத்திற் கொண்டே நாட்டு மக்கள் அரசியல் தீர்மானம் எடுப்பார்கள்.

ஐந்திற்கும் அதிகமான ஆச னங்களை நேரடியாக எதிர்பார்த்தோம். ஆனால் ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை. மொத்த வாக்குகளுக்கமைய ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைக் கப் பெற்றுள்ளது.

தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்ததன் பின்னர் தேசிய பட்டியல் ஊடாக பாராளு மன்றத்துக்கு செல்வது முறையற் றது - என்றார். (அ)

# சிலிண்டரின் தேசிய பட்டியலில் ரவி!

கொழும்பு, நவ. 19

புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்படவுள்ளார்.

நடைபெற்று முடிந்த பாராளு மன்றத் தேர்தல் முடிவுகளின்படி, புதிய ஜனநாயக முன்னணிக்கு (சிலிண்டர்) இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்தன.

அதற்கமைய, குறித்த தேசியப் பட்டியலுக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பெயரிடப் பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



எவ்வாறாயினும், மற்றைய தேசியப் பட்டியல் உறுப்பினர் தெரிவு குறித்து விரைவில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவுள் ளதாக தெரியவருகிறது.

2024 பொதுத் தேர்தலில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி 500,835 வாக்குகளைப் பெற்று 2 தேசியப் பட்டியல் ஆச னங்களைக் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org